**சரியான விடை மார்ச் 2015**

1.(ஈ) நெகிழ்ச்சி தன்மையற்றது.
2.(இ) கூட்டுப்பங்கு நிறுமம்
3.(இ) வரையறை இல்லாதது
4.(இ) கிம்பால் மற்றும் கிம்பால்
5.(அ) ஒப்பந்தத்தால்
6.(இ) நிறுமச் செயல்முறை விதிகள் மாதிரி
7.(அ) கடனாளர்கள்
8.(ஆ)பங்குகள்மீது செலுத்தப்பெறாதிருக்கும் மதிப்பளவாகும்
9.(ஆ) 15
10(அ) மேலாண்மை இயக்குநர்
11.(இ) பொது வரையறை நிறுமங்கள்
12.(ஆ) 21
13.(அ) காளை
14.(இ) நிதிப்பத்திரங்கள்
15.(ஆ) 1956
16.(இ) சரக்குகள்
17.(ஆ) மாவட்டத்தலைநகரங்களில்
18.(அ) 51%
19.(ஈ) 18
20.(ஈ) வரையறுக்கப்படாத செயல் சுதந்திரம்

**கோடிட்ட இடத்தை நிரப்புக**

21. தனியாள் வணிகம்
22. துறைமுறை
23. இணைவினை
24. வரையறாப் பொறுப்பு
25. உட்கிடை ஆணையுரிமை
26. வில்லியம் R பேசட்
27. தகவலறிக்கை
28. கடனாளர்கள்
29. ஏழு
30. முகவர்களாகவும்
31. இயக்குநர் அவையால்
32. 21
33. அழைப்பு பணத்தை
34. உடைமை
35. அவ்விடத்து ஒப்பந்தம்
36. இராபர்ட் ஓவன்
37. மக்களாட்சி தன்மை
38. எழுத்து
39. அரசுத்தொழில்
40. நாட்டுடைமையாக்கம்

**ஏதேனும் 10வினாக்களுக்கு விடையளி10X4=40**

**41.அமைப்பு** (ஏதேனும் ஒரு இலக்கணம்) ஆலன்லூயி அவர்களின் கூற்றுபடி செய்ய வேண்டிய பணியினை அறிந்து அதனை தொகுதிகளாக பிரித்தலும் குறிக்கோள்களை அடைய பணியாளர்களால் பயன்தரு முறையே உழைக்கும் நோக்குடன் அவர்களுக்கிடையே உறவு முறைகளை ஏற்படுத்தும் பொறுப்பையும் ஆணையுரிமையையும் வரையுறுத்தி வழங்களையும் அமைப்பு என்ற சொல் குறிக்கும்

**42.அரசுத் தொழில்களை உருவாக்குதல்** அரசே முதலீடு செய்து புதிய தொழில் நிறுவனங்களை அமைத்து மேலாண்மை செய்யலாம். ஏற்கனவே தனியார் துறையில் இயங்கி வரும் வணிக அமைப்புகளை நாட்டுடைமையாக்கி அரசு தொழில்களாக அவை செயல்படுமாறு செய்யலாம்.

**43.பன்னாட்டு நிறுமம் எ.கா** 1.யூனி லீவர் லிமிடெட் 2.யூனியன் கார்பைடு 3.இன்டர்நேஷனல் பிசினஸ் மெஷின் 4.பிலிப்ஸ் 5.கோகோ கோலா கழகம்

**44.வரையறா பொறுப்பு:** தொழிலின் கடன்களை செலுத்த தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லாவிடில் தனது சொந்த சொத்துக்களிலிருந்து கடனீந்தோருக்கு செலுத்த வேண்டும். அதாவது கடனீந்தோருக்கு உரிமையாளரின் சொந்த சொத்துக்களை பறிமுதல் செய்யும் உரிமை உண்டு

**45.கூட்டாண்மை நிறுவனத்தின் உறுப்பினர் எண்ணிக்கை** குறைந்தபட்சம் 2 அதிகபட்சம் வங்கித்தொழில் 10, பிறதொழில் 20.

**46.கூட்டாண்மை** (ஏதேனும் ஒரு இலக்கணம்) 1932 ஆண்டு இந்திய கூட்டாண்மைச் சட்டத்தின் 4வது பிரிவின்படி "எல்லோரும் சேர்ந்தோ அல்லது எல்லோருக்குமாக ஒருவரோ நடத்தும் தொழிலின் இலாபத்தைப் பகிர்ந்துகொள்ள ஒப்புக் கொண்டவர்களிடையே நிலவும் உறவு"

**47.ஒறுப்பிழைப்பு செய்யப்பட்ட பங்குகளை மறுவெளியீடு செய்தல்** பங்குகளைப் பறிமுதல் செய்யும்பொழுது அவை மீண்டும் நிறுமத்திற்கு வந்துவிடுகின்றன. எனவே பங்குமுதல் தொகை பறிமுதலுக்கு உள்ளான பங்குத்தொகை அளவிற்கு குறைந்துவிடும். ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளை வட்டத்தில் வெளியிடலாம். மறுவெளியீட்டில் வழங்கப்படும் தள்ளுபடி அப்பங்குகள் மீது முந்தையப் பங்குநரிடமிருந்து பெறப்பட்ட தொகை மிஞ்சக்கூடாது.

**48.அயல்நாட்டு நிறுமம்** இந்தியாவுக்கு அப்பால் (வெளிநாட்டில்) பதிவு செய்யப்பட்டு ஆனால் இந்தியாவில் தொழிலிடம் உள்ள நிறுமம்.

**49.பகராள் :** கூட்டத்தில் கலந்துகொள்ள உறுப்பினரால் நியமிக்கப்படும் ஒரு நபரை குறிக்கும். பகராளை நியமிக்கும் பத்திரத்தையும் கூட பகராள் எனும் சொல் உணர்த்தும்.

**50.கூட்டத்தில் குறைவெண் :** ஏதேனும் பொருள் குறித்துச் செல்லத்தக்க வகையில் தீர்மானம் நிறைவேற்ற நடைபெறும் நிறுமக்கூட்டத்தில் நேரடியாகக் கலந்துகொள்ள வேண்டிய குறைந்தளவு உறுப்பினர் எண்ணிக்கையே

**51.பட்டியலிடுதல் :** பங்கு மாற்றகங்களின் அலுவல் பட்டியலில் பத்திரங்களைச் சேர்ப்பதே ஆகும். பொது நிறுமங்களுக்கு பட்டியலிடுதல் கட்டாயம் ஆகும்

**52.செபி:** இந்தியப் பங்கு சந்தையின் வளர்ச்சிக்காகப் பங்கு மாற்றகங்களின் செயல்களை ஒழுங்குபடுத்த சுதந்திரமான ஒரு தனி அமைப்பின் மேற்பார்வையிலும் கட்டுப்பாட்டுக்குள்ளும் கொண்டுவருதல் அவசியமாகிறது. எனவே மத்திய அரசு இந்திய பத்திர மற்றும் மாற்றகங்களின் வாரியத்தை ஏற்படுத்தியது.

**53.கூட்டுறவு பண்டகச்சாலை :** அதிகமாக கிராமபுறங்களில் காணப்படும். விவசாயப் பொருட்களை சேமித்து வைக்கும் வசதியை உறுப்பினர்களுக்கு அளிக்கிறது. மேலும் முற்றுப் பெற்ற பொருட்களை சந்தையில் நல்ல விலை கிடைக்கும்வரை சேமித்து வைக்க உதவுகிறது.

**54.இராக்டேல் முன்னோடிகள்:**
இராபர்ட் ஓவன் என்பவர் முதல் கூட்டுறவு இயக்கத்தை 1844ம் ஆண்டு 28 உறுப்பினர்களுடன் இராக்குடேல் என்ற பெயரில் தொடங்கினார். இது முதன்முதலாக தொடங்கப்பட்ட நுகர்வோர் கூட்டுறவு சங்கமாகும்.

**55.இராணுவம் சார்ந்த தொழில்களுக்கு துறைவாரி அமைப்பே சிறந்தது :** அரசுக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டிருக்க வேண்டிய அணுசக்தி போன்ற தொழில்களுக்கும் மிக இரகசியமாக நடத்த வேண்டிய நாட்டின் பாதுகாப்பு சார்ந்த தொழில்களுக்கும் சிறந்த வடிவமைப்பு துறைவாரி அமைப்பேயாகும்.

**ஏதேனும் 5 வினாக்களுக்கு விடையளி :5X8=40**

**56. கட்டுப்பாட்டு வீச்செல்லை** ஒரு அமைப்பின் மேலாண்மையர் தனக்குகீழ் பணியாற்றக்கூடிய பணியாளர்களை அதிக அளவில் நிர்வகிக்க இயலாது. ஒரு அதிகாரி எத்தனை கீழ் பணியாளர்களை சீரிய முறையில் நிர்வகிக்க முடியும் என்பதை குறிக்கும்.

**கட்டளை ஒருமை** ஒவ்வொரு பணியாளரும் ஆணைகளை உயர் அதிகாரியிடமிருந்து பெற வேண்டும். ஒரு பணியாளர் இரு உயர் அதிகாரிகளின் கீழ் பணியாற்றுவது கடினம். இரண்டு உயரதிகாரிகளின் கீழ் பணியாற்றினால் குழப்பமும் ஒழுங்கின்மையும் ஏற்பட வாய்ப்புண்டு.

**57.கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்யாமையின் குறைபாடுகள்**
1.நிறுவனத்திற்கு எதிராகவோ அல்லது ஏனைய கூட்டாளிகள் மீதோ முன்னாள் கூட்டாளி உட்பட கூட்டாண்மை உடன்பாட்டின் கீழ் அல்லது சட்டத்தின் கீழ் தனக்குள்ள ஒப்பந்த உரிமைகளை நிலை நாட்ட ஒரு கூட்டாளி வழக்கு தொடர முடியாது. **2.**மூன்றாமவர் மீது எந்த உரிமையியல் நீதிமன்றத்திலும் பதிவுறா நிறுவனமொன்று தனக்கு சேரவேண்டிய பாக்கிபணத்தை பெற எவ் வழக்கையும் தொடர முடியாது. **3.**நிறுவனத்துக் கெதிராகவோ கூட்டாளிகளுக் கெதிராகவோ மூன்றாமவர் எவரும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. **4.**தனது கூட்டாளிகளை எதிர்த்து நிறுவனம் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. **5.**பதிவு செய்யா நிறுவனம் மூன்றாம் நபருக்கு எதிராக ரூ.100 க்கு மேல் திரும்பப்பெற அதனுடைய உரிமையை செயல்படுத்த இயலாது.**6.**நிறுவனத்தை கலைக்கக் கோரி அல்லது கலைக்கப்பட்ட நிறுவனத்தின் சொத்துகளை விற்று பணமாக்க அல்லது கலைப்பின் போது கணக்குகளை தீர்த்துக்கொள்ள கூட்டாளியொருவர் வழக்கு தொடுக்க முடியாது. **7.**நிறுவனத்தின் வியாபார குறிகள் மற்றும் பதிப்புரிமைகளை வெளியாட்கள் பயன்படுத்தக் கூடாது என தடுக்கும் உரிமையை கூட்டாண்மை இழக்கும்.

**58.செயல்முறை விதிகளில் உள்ள பொருளடக்கங்கள்**
1.நிறுமச்சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை **A** எந்த அளவிற்கு இந்நிறுமத்திற்கு பொருந்தாது என்பதை நிறுமம் தனக்கென வகுக்கும் செயல்முறை விதிகளில் குறிப்பிட வேண்டும். **2.**தொடக்க ஒப்பந்தங்கள் ஏதேனும் இருப்பினும் அவற்றை ஏற்று கொள்ளுதல் அல்லது நிறைவேற்றுதல் குறித்து **3.**பங்குமுதல் பங்குகளின் பல்வேறு வகைகள் ஒவ்வொரு வகைக்கும் உள்ள உரிமைகள் **4.**பங்குகள் ஒதுக்கீடு பங்குகள் மீது அழைப்பு கோரல் தொடர்பானவை **5.**பங்குகள் ஒறுப்பிழப்பு அல்லது பறிமுதல் செய்தல் பறிமுதல் செய்யப்பட்ட பங்குகளை மறுவெளியீடு செய்தல் **6.**பங்குச் சான்றிதழ்கள் பங்காணைகள் அனுப்புதல் குறித்து **7.**பங்குகள் மாற்றுதல் அல்லது வாரிசு முறை மாற்றம் குறித்த வழிமுறைகள் **8.**பங்குகளை பங்கிருப்பாக மாற்றுதல் **9.**பங்ககளை அல்லது கடன் பத்திர வெளியீட்டில் ஒப்புறுதியாளர்கட்கு கொடுக்க வேண்டிய தரகுத்தொகை **10.**பங்கு முதலை மாற்றி அமைத்தல் **11.**இயக்குநர்களை நியமித்தல் அவர்களின் தகுதிகள் ஊதியம் குறித்தவை **12.**இயக்குநர்களின் கடன்வாங்கும் அளவு **13.**மேலாண்மை இயக்குநர் மேலாளர் செயலர் போன்றோரை நியமித்தல் **14.**நிறுமத்தின் பொது இலச்சியினை பயன்படுத்துதல் குறித்த விதிமுறைகள் **15.**இயக்குநரவை கூட்டங்கள் **16.**பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்களின் வாக்குரிமைகள் பகராள்கள் வாக்கெடுப்பு போன்ற விதிமுறைகள் **17.**பங்குநர்களின் பல்வேறு வகையான கூட்டங்களை கூட்டி நடத்துதல் **18.**பங்கதாயம் வழங்குதல் காப்பு ஏற்படுத்துதல் போன்றவை **19.**மீள்தகு முன்னுரிமைப் பங்குகள் வெளியீடுகள்குறித்தவிதிமுறைகள்**20.**நிறுமக்கலைப்பு

**59.பங்குகட்கும் கடனீட்டுப்பத்திரங்களுக்கும்உள்ள வேறுபாடு**

| வ.எண் | அடிப்படை | பங்குகள் | கடனீட்டுப்பத்திரங்கள் |
|---|---|---|---|
| 1. | பொருள் | ஒரு நிறுமத்தில் பங்கு முதலீன் ஒரு சிறு கூரே பங்காகும் எனவே பங்குநர் நிறுமத்தின் உரிமையாளர் நிலையில் இருக்கிறார் | கடனீட்டுப்பத்திரங்கள் நிறுமத்திற்கு கொடுத்தகடனை உறுதிபடுத்தும் சான்றாகும் கடன் பத்திரதாரர் நிறுமத்தின்கடனாளர்ஆகிறார் |
| 2. | இலாபத்தை வழங்குதல் | போதுமா லாபம் ஈட்டினால்மட்டுமே பங்குனர்கட்குப் பங்காதாம் வழங்கப்படும். | குறிப்பிட்ட கால இடைவெளிகளில் லாப நட்டத்தை கருதாமல்கடனீட்டு பத்திரத்தின் மீது வட்டி வழங்கப்படுகிறது. இயக்குநர் முடிவால்இதனை மாற்ற முடியாது |

| | | | |
|---|---|---|---|
| 3. | இலாபத்தின் அளவு | முற்றுரிமை பங்கட்கு குறிபிட்டவிதத்தில் நிலையான பங்காதயம்ஆனால் நேர்மைபங்குகட்கு கொடுக்கப்படும் பங்காதாயவிகிதம் இலாபத்திற்கேற்ப மாறக்கூடியது | குறிப்பிட்ட விதத்தில் வட்டி செலுத்தப் பெறும் இலாத்தின் அளவையொட்டி வட்டிவீதம் மாறாது. |
| 4. | இயக்குநர் ஒப்புதல் | இலாபம் ஈட்டுறுப்பினும் இயக்கநர்அவை பரிந்துரைத்து ஆண்டுபொதுக் கூட்டத்தில் தீர்மானத்தின்மூலம் விளம்பப்பட்டால் மட்டுமே பங்காதாயம் வழங்கப்படும் | கடனீட்டுப்பத்திர வட்டி செலுத்துவதற்கு எவருடைய பரிந்துரையும் ஒப்பதலும் வேண்டியதில்லை |
| 5. | லாபத்தை வழங்குதல் | பங்காதாயம் இலாபப்பகிர்வு ஆகும் | கடனீட்டுப்பத்திர வட்டி லாபத்தின்மீதான செலவாகும். |
| 6. | பொறுப்பு | பங்குநர் ஒருவர் பொறுப்புதான் வைத்துள்ள பங்குகள் மீது செலுத்த பெறாதிருக்கும் தொகை அளவே ஆகும். | ஆத்தகைய பொறுப்பு ஏதும் கடனீட்டு பத்திரதாரர்களுக்கு இல்லை |
| **7.** | வட்டத்தில் வெளியிடுதல் | நிறுமச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுதான் நிறுமம்பங்குகளை வட்டத்தில் வெளியிடலாம் | கடனீட்டபத்திரங்களை வட்டத்தில் வெளியிட அத்தகைய நிபந்தனைகள் ஏதுமில்லை |
| 8. | சொத்துகள் மீது பிணை | நிறுமச் சொத்துகள் மீது பங்குநர்கட்கு ஈடுஏதுமில்லை | கடனீட்டு பத்திரங்கள் பொதுவாக சொத்துகள் பிணையாக பெற்றிருக்கும் |

**60.ஒருநிறுமத்தில் இயக்குநர் வகிக்கும் நிலைகள்:**

1.இயக்குநர்களாக: நிறுமத்தின் பொறுட்டு பிறருடன் அவர்கள் ஒப்பந்தங்களில் ஈடுபடும் பொழுது நிறுமத்தின் முகவர்களாக இயக்குநர்கள் செயல்படுகின்றனர்.முகவர் தன் செயலால் முதல்வரை கட்டுப்படுத்துவது போன்றே இயக்குநர்கள் தங்கள் செயல்களால் நிறுமத்தைக் கட்டுப்படுத்துகிறார்.

2.பொறுப்பான்மையர்களாக : நிறுமத்தின் சொத்துகளை நிர்வகிக்கும் பொழுதும் பயன்யடுத்தப்படும் பொழுதும் இயக்குநர்கள் பொறுப்பான்மையாளர்களாக செயல்படுகின்றனர். அவ்வாறே தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தும்பொழுது அதே நிலையில் உள்ளனர்.அதாவது பொறுப்பாண்மையர் ஒருவர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சொத்துகளை எவ்வாறு பயன் பெறுனர் நலனுக்காக பயன்னடுத்த வேண்டுமோ அது போன்றே இயக்குநர்கள் தங்களிடம ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களையும் சொத்துகளையும் நிறும நலன் கருதி மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

3.அதிகரிகளாக : இயக்குநர்கள் நிறுமத்தின் அதிகாரிகள் போன்று செயல்படுகின்றனர்.நிறும மேலாண்மையில் ஈடுபடும் பொழுது அதன் முதன்னைச் செயலதிகாரிகள் போன்று செயல்படுகின்றனர்.

**61.பத்திர சந்தையை விவரி:**

பத்திர சந்தை என்ற சொல் பத்திரங்களை வாங்கி விற்க்கப்படும் இடம் மற்றும் வாங்கி விற்ப்பவர்களையும் குறிக்கும்.அது

1.பத்திரங்களை வாங்குவது மற்றும் விற்பது

2.நிறும பத்திரங்கள் மற்றும் அரசு பத்திரங்களை வாங்கி விற்பனை செய்ய உதவும் தரகர்கள் முகமை அமைப்பகள் போன்றவை ஆகும்.

பத்திர சந்தையை இரு பிரிவுகளாக பிரிக்கலாம்.

1.முதன்மைச் சந்தை

2.இராண்டாம் நிலைச் சந்தை

முதன்மைச் சந்தை புதிய விடுப்புகளின் சந்தையைக்குறிக்கும். இராண்டாம் நிலைச் சந்தை என்பது முதன்மைச் சந்தையில் வெளியிடப்பட்ட பங்குகளை மறுவிற்பனை செய்வதாகும்.

பத்திரங்கள் சந்தை

- தொழில் நிறுவனங்களின் பத்திர சந்தை
  - புதிய வெளியீடுகளின் சந்தை பங்கு மாற்றகம்
  - பழைய பத்திரங்களின் சந்தை
- அரசு பத்திரங்கள் (நிறுமப்பத்திரங்கள்)

**62.கூட்டுறவு அமைக்க பின்பற்ற வேண்டிய முறைகள் :** கூட்டுறவு சங்கச் சட்டம் 1912ன் படி அல்லது மாநில கூட்டுறவு சங்கத்தின் படி ஒரு சங்கம் பதிவு செய்யப்பட வேண்டும். ஒரு ஊரைச் செர்ந்த பொதுநலம் உள்ள ஏதேனும் 25 நபர்கள் கூடி கூட்டுறவுச் சங்கத்தை தோற்றுவிக்கலாம். கூட்டுறவுச் சங்கப்பதிவாளரிடம் சங்கம் அமைக்க இருக்கும் விருப்பத்தை விண்ணப்படிவ மூலம் தெரிவிக்க வேண்டும். அந்த விண்ணப்ப படிவத்திற்கு அமைப்பு முறையேடு என்று பொயர். அதில் சங்கத்தின் பெயரும், விலாசமும், நோக்கங்களும், முதல் உறுப்பினரின் பொறுப்பு ஆகியவற்றை குறிக்கவேண்டும். விண்ணப்பத்துடன் சங்கத்தின் துணை விதிகளையும் கட்டுப்பாடுகள் ஆகியவற்றை இணைத்திருக்க வேண்டும். மேலாண்மை செய்யும் முறை கூட்டம் நடைமுறைகள் தீர்மானங்கள் ஆகியவற்றை துணை விதிகளில் குறிப்பிட வேண்டும்.பதிவாளர் பத்திரங்களை முறையாக பரிசீலித்து அவை சட்டப்படி உள்ளனவா என்பதை ஆய்வு செய்வார்.அவர் முழு திருப்தியடைந்தவுடன் சங்கத்தினுடைய பதிவேடுகளில் கூட்டுருவாக்க பதிவு சான்றிதழைக் கொடுப்பார்.இச்சான்றிதழ்

கொடுத்த பின் அச்சங்கம் சட்ட உருவைப் பெற்று தனி ஆளுமையைப் பெறுகிறது.

**63.பொதுகழகத்தின் இயல்புகள் :**

**1.தனித்தியங்கும் சட்டத்தன்மை:** இது அதற்கென மத்திய அல்லது மாநில அரசால் இயற்றப்படும் தனிசட்டத்தால் தோற்றுவிக்கப்படும்.

**2.நீடித்த நிலைத்தன்மை:** இது நிறுமத்தைப்போன்று பொது முத்திரை மற்றும் நிலைத்தன்மையையும் பெற்றிருக்கும்.தனது பொது முத்திரையின் கீழ் ஒப்பந்தங்களை மேற்கொள்ளலாம்.

**3.அரசு முதலீடு:** அதற்கு தேவையான முதல் முழுவதையும் அரசிடமிருந்து பெறுகிறது.சில பொது கழகங்களில் தனியார் முதலீடு செய்யப்படும் நிலையிருந்தால் குறைந்த பட்சம் 51 விழுக்காடு பங்குகளை வைத்திருக்கும்.

**4.நிதிதன்னாட்சியுரிமை:** அன்றாட நடவடிக்கைகளுக்கு தேவையான நிதிக்காக இந் நிறுவனங்கள் அரசை சார்ந்திருப்பதில்லை. தேவைப்பட்டால் பொதுமக்களிடம் அல்லது அரசிடம் கடன் பெறலாம்.

**5.நிர்வாகம்:** பொது கழகம் இயக்குநரவையால் மேலாண்மை செய்யப்படுகிறது.தகுதி திறமை அனுபவம் கருதி இயக்குநர்கள் அரசால் நியமிக்கப்படுகிறார்கள்.

**6.சேவை நோக்கம்:** இது இலாப நோக்கு இல்லாமல் சேவை நோக்கை கொண்டு செயல்படும். அதாவது சரக்கு அல்லது பணியினை நியமான விலையில் அளிக்கும் நோக்கில் செயல்படுகிறது.

**7.பணியாளர்கள்**: பணியாளர்கள் அரசு ஊழியர்கள் அல்ல. அக்கழகமே அவர்களின் பணியமர்த்தல் சம்பளம் இன்ன பிறப் பணிகளை தீர்மானிக்கும்.

**8.உரிமை மற்றும் கடமை:** இதைப்படைக்கும் சட்டமே உரிமைகள் கடமைகள் பொறுப்புகள் ஆகியவற்றை தெளிவாக முடிவு செய்யும்.

**9.அரசு தலையீடின்மை:** இதன் அன்றாட அலுவல்களில் அரசு தலையிடாது. சுதந்திரமாக தம் கொள்கைகளை கழகங்கள் செயல்படுத்தலாம்.

**10.தன்னாட்சியுரிமை:** இக்கழகங்களுக்கு நிதி மேலாண்மையில் தன்னாட்சியுரிமை உள்ளது.இயக்குநரவையால் தீர்மானிக்கப்பட்ட நோக்கங்களுக்காக இந்நிறுவனங்கள் தங்கள் நிதியினை பயன்படுத்தலாம்.

**11.பதில் சொல்லும் கடமை**: இக்கழகங்களுக்கு பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்திற்கும் அத் தொழில் சார்ந்த அமைச்சரகத்திற்கும் பதில் சொல்லும் கடமை உண்டு.

**12.தொழில் கொள்கை:** லாபம் ஈட்டுவது முதன்மை நோக்கம் இல்லாமலிருப்பினும் கழகங்கள் தொழில் கண்ணோட்டத்தோடு இயங்குகின்றன.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 4X20=80**

**64)அ)பன்னாட்டு நிறுமங்கள் பற்றி நீ அறிவது யாது?அதன் சிறப்பியல்புகள் பற்றி எழுதுக.**

பன்னாட்டு நிறுமம் என்ற சொல் இரண்டு பதங்களை கொண்டுள்ளது பன் என்பது பல அல்லது அநேக என்பதை குறிக்கும் நாடு என்பது பல தேசங்களைக் குறிக்கும். எனவே பன்னாட்டு நிறுமம் என்பது பல நாடுகளில் இயங்கி வரும் நிறுமமாகும். இந்த நிறுமங்களுக்கு தொழிற்சாலைகளும் அலுவலகக் கிளைகளும் ஒன்றுக்கு மேற்பட்ட நாடுகளில் இருக்கும் எல்லாவகையான வியாபார அமைப்பு ஒரு நாட்டு அரசின் எல்லையை தாண்டிச் சென்றால் அது பன்னாட்டு நிறுமம் எனப்படும். இதை உலக அளவில் பலமிக்கவன் (அ)உலக வியாபாரம (அ)பன்னாட்டு வியாபாரம் எனப்படும்.

**வரைவிலக்கணம் :** ஐக்கிய நாட்டுக் குழுவின் கூற்றுப்படி பன்னாட்டு நிறுமம் என்பது எந் நாட்டில் உருவாக்கப்பட்டதோ அதைவிட கூடுதலாக பல நாடுகளில் கூட்டுருவாக்கம் பெற்றிருப்பதே ஆகும்.

**சிறப்பியல்புகள் :**

1.ஒரே சமயத்தில் பல நாடுகளில் நடத்தப்படும்.

2.இது உலக அளவில் பெரியது.

3.இது அயல் நாடுகளில் உள்ள கச்சா பொருட்கள் பணியாட்கள் சந்தை ஆகியவற்றை பயன்னடுத்திக் கொண்டு போக்குவரத்துச் செலவை குறைக்க முற்படும்.

**பிற செய்திகள் :** உலக அளவில் 500 முதல் 700 பன்னாட்டு நிறுமங்கள் இன்று செயல்படுகின்றன. இதில் சரிபாதியாக அமெரிக்காவிலும் மீதி பிற நாடுகளில் காணப்படுகின்றன. அமெரிக்காவில் தலைமையிடமாக கொண்டுள்ள பன்னாட்டு நிறுமங்கள் அயல் நாட்டு முதலீட்டை நேரடியாக பெறுகின்றன. பின்தங்கிய நாடுகளில் முதலீடுகளும் பணியிடங்களும் 12 நாடுகளில் பன்னாட்டு நிறுமங்கள் ஏற்படுத்தி உள்ளன. அவைகள் பிரேசில் ஹாங்காங் மெக்ஸிகோ சிங்கப்பூர் (ம)தென் கொரியா போன்றவை பன்னாட்டு உழைப்பாளர் சங்க அமைப்பின் கூற்றுப்படி அமெரிக்காவில் 60% நிறுமங்கள் வேலை வாய்ப்பயை வளரும் நாடுகளில் உருவாக்குகின்றன.ஆசிய நாடுகளில் 30% நிறுமங்களும் ஆப்ரிக்க நாடுகளில் 10% நிறுமங்களும் உள்ளன.

எடுத்துக்காட்டுகள் : யூனிலிவர் லிமிடெட் - பிரிட்டிஸ் நிறுமம் இந்தியாவில் இந்துஸ்தான் லிவர் லிமிடெட் என்ற துணை நிறுமம் பெற்றுள்ளது.

யூனியன் கார்பைட் - அமெரிக்க நிறுமம் இது இந்தியா உட்பட பல நாடுகளில் கிளை நிறுமங்களை பெற்றுள்ளது.

இண்டர்நேஷனல் பிசினஸ் மிசின் -அமெரிக்க நிறுமம் பல நாடுகளில் துணை நிறுமங்களைக் கொண்டுள்ளது.

பிலிப்ஸ் - டச்சு நிறுமம் இந்தியாவில் பிலிப்ஸ் இந்தியா என்னும் துணை நிறுமம் உள்ளது.

கோகோ கோலோ கழகம் - அமெரிக்க நிறுமம் பல நாடுகளில் குளிர்பானங்களை உற்பத்தி செய்துவிற்பனை செய்யப்படுகிறது

**64.ஆ.அரசு தொழில்களின் நோக்கங்கள்** :

**1.பல்வகைஉற்பத்தி செய்ய உதவுவது**: இலாபம் ஈட்டுவதிலேயே குறியாக இருக்கும் தனியார் தொழில் முனைவோர்.இலாப வாய்ப்பு மிகுந்த தொழில்களில் மட்டும் முதலீடு செய்ய விரும்புவர்.லாப வாய்ப்புகள்

அதிகம் இல்லாத அதே சமயம் நாட்டுக்கு தேவையான தொழிகளின் முதலீடு செய்ய விரும்பமாட்டார்கள்.தனியார் துறை மேற்கொள்ள அஞ்சும் தொழிலில்களில் முதலீடு செய்து மக்களுக்கு சேவையாற்றுவதற்கு அரசு நிறுவனங்களை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

**2.அடிப்படை தொழில்களின் வளர்ச்சி** : பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத தொழில்களை அடிப்படை தொழிகள் எனலாம்.எடுத்துக்காட்டாக இரும்பு எ.்.கு ஆலைகள் வேதியியல் தொழில்கள் போன்றவை அடிப்படை தொழிகள்ஆகும். இத்தகைய தொழிலில்கள் அரசு தொழில்களாகவே இருப்பதே சால சிறந்தது.

**3.பேரளவு முதலீட்டு நிறுவனங்கள்:**

சிலதொழில் நிறுவனங்களில் பேரளவு முதலீடு செய்ய வேண்டும். மேலும் அந் நிறுவனங்கள் தொழில் உற்பத்தி தொடக்க காலம் நீண்டதாக இருக்கும்' தனியார் தொழில் முனைவோர்களால் பேரளவு முதலீட்டினை அளிக்க முடியாது.எடுத்துக்காட்டாக இரயில் கப்பல் கட்டுவது மின்சக்கி ஆகிய தொழிகளுக்க தேவையான பேரளவு முதலீட்டினை தனியார் முதலீட்டினால் அளிக்க முடியாது.

**4.இன்றியமையாத வசதிகளை நல்குவது:** குடிநீர் மின் உற்பத்தி மின்சக்தி எரிவாயு போக்குவரத்து தகவல் தொடர்பு போனடறவை நாடு முழுவதும் அன்றாட தேவைப்படும் இன்றியமையாத வசதிகள் ஆகும் இத் தேவைகள் மிக குறைந்த விலையில் பூர்த்தி செய்ய வேண்டும். எனவே இவ்வசதிகளை செய்து தரும் அமைப்பகள் அரசு தொழிகள் ஆகவே இயங்க வேண்டும்.

**5.முற்றுரிமை நிறுவனங்களை ஏற்படுத்தவது:** ஒரு நாட்டை அயல் நாடுகளின் தாக்குதலில் இருந்து காப்பது மிகவும் இன்றியமையாதது ஆகும்.நாட்டின் பாதுகாப்பு சார்ந்த தொழிகள் தனியார் வசம் இருந்தால் ஒரு நெருக்கடி ஏற்படும் பொழுது அவர்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்பையும் நல்காமல் போகும் நிலை உருவாக வாய்ப்பு உண்டு.அல்லாமலும் அவர்களட நாட்டின்பாதுகாப்பு குறித்த இரகசியங்களை எதிரி நாடுகளுக்கு சொல்லக்கூடிய அபாயமும் இருக்கிறது.

**6.அனைத்து பகுதிகளிலும் சமமாக பொருளாதார வளர்ச்சி பெறுதல்:**தொழில் உற்பத்தி வளர்ச்சியின் நோக்கம் நாட்டிற்கு தேவையான அனைத்து உற்பத்தி தொழில்களை ஏற்படுத்துவதே ஆகும் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சமச்சிரான முன்னேற்றம் ஏற்பட வேண்டும்.தனியார் துறையினர் லாபம் ஈட்ட வாய்ப்பு இல்லாத நாட்டின் பின்தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்களை அமைக்கவிரும்பியதில்லை.

**7.இயற்கை வளங்கள் தோண்டியெடுத்தல்:** நாட்டின் இயற்கையாக கிடைக்கும் பொருட்கள் வளங்களை தோன்றி எடுக்கும் தொழிகளில் முதலீடு செய்வதே நட்டத்தை ஏற்று கொள்ள தனியாா துறை விரும்புவதில்லை. இந்தியாவில் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கமிசன் புதுத்தோற்று வாய்களை கண்டுபிடிப்பதற்காக பேரளவு தொகைகளை செலவிடுகிறது.

**8.பொருளாதார வலிமை செறிவடைவதை தடுத்தல்:**

உற்பத்தியானது தனியாரிடம் முழுவதுமாக இருந்தால் தங்களுடைய லாபத்தை அதிகரிப்பதற்காக அவர்கள் பொது மக்களையும் நுகர்வோரையும் சுரண்டுவர் தனியார் துறை அவ்வாறு லாப நோக்கோடு செயல்படும் போது அதன் விலைவாக பொருளாதார வலிமை அவற்றிடம் மேலும் செறிவடைவதையும் நாம் அறிவோம்.

**9.நிறைவேலைவாய்பை உறுதிபடுத்துதல் :**

நிறைவேலைவாய்பு பொது உடமை உற்பத்தியினாலே ஏற்படும். முழு வீச்சில் செயல்படும் தனியார் துறையை பெற்றுள்ள வளர்ச்சியடைந்த நாடுகள் கூட வேலைவாய்பை பெறுவதில்லை .நாட்டில் உள்ள வளங்கள் நன்கு பயன்படுத்தப் பட்டால்தான் பொருளதாரவளர்ச்சி விரைவாக ஏற்படும்.இதற்கு அரசு பொருளாதார துறை கவனம் செலுத்தி திட்டங்கள் தீட்ட வேண்டும்.

**10.அரசின் வருவாயைப் பெருக்குதல்:** சில அரசு நிறுவனங்கள் வணிக கொள்கைகளின் அடிப்படையில் செயல்படும்.அந்நிறுவனங்களில் வருவாய் அரசு கருவுலத்தில் சேர்க்கப்படும்.இவ்வாறு அரசின் நிதிநிலைமை மேம்படுத்தப்பட்டு பொருளாதார முக்கிய துவம் வாய்ந்த திட்டங்களை நிறைவேற்ற பயன்படுத்த படுகிறது அது மக்கள் வாழ்க்கை தரம் உயர்த்த உதவும்.கல்வி மருத்தவம் வீடு போன்றவை பொது நல பணிகளுக்கம் இவ்வருவாய்செலவிடப்படுகிறது.

### 65)அ) தனிநபர் வணிகத்தின் குணாதிசியங்கள்:

1)**தனிநபர்உரிமையும்கட்டுபாடும்** தனிநபர் ஒருவரே இதன்உரிமையாளர்.எனவே அவரே உரிமையாளராகவும் தலைவராகவும்யாருடையகுறுக்குஇல்லாமல்சுந்திரமாக வியாபாரத்தைநடத்துகிறார்.அதனால்தனியாள்வணிகத்தின்உரிமையும்கட்டுப்பாடும்அவர் வசமேஉள்ளது.

2)**மூலதனம்**: தனியாள்வணிகத்தில்அவரேமுதலீடு செய்கிறர். இம்முதல்தன்சொந்தசேமிப்பிலிருந்தோ அல்லதுநண்பாகள்உறவினாகள்மற்றும்நிதிநிறுவனங்களிடமிருந்தோகடனாபெற்றுமுதலீடுசெய்யலாம்.

3)**வரையறாபொறுப்பு**: இவரின்பொறுப்பு வரையறுக்கப்படாதது.வியாபாரகடன்களுக்குதொழிலின் சொத்துகள்போதுமானதாகஇல்லாவிட்டால்தனதுசொந்த சொத்திலிருந்துஅக்கடன்களைதீர்க்கவேண்டும்.

4)**இலாபநட்டம்**:வியாபாரத்தில்கிடைக்கும்இலாபம் முழுவதும்தனிவணிகரையேசேரும். அவர்பிறருடன் பங்கிட்டுக்கொள்ளதேவையில்லை.அதுபோலநட்டம்ஏற்பட்டால்அந்தநட்டம்முழுவதையும்அவரேஏற்கவேண்டும்.

5)**சட்டத்தனித்துவமின்மை**: தனியாள்வணிகத்தில் உரிமையாளரையும்தொழிலையும்சட்டம்ஒன்றாகக்கருதுகிறது.உரிமையாளரோஅவரேநிர்வாகம்செய்கிறார்.கூட்டுப்பங்குநிறுமத்தைப்போல்உரிமையும்நிர்வாகமும்பிரிக்கப்படவில்லை.

6.**தனிச்சட்டம்மில்லை**:கூட்டாண்மைசட்டம்கூட்டாண்மைக்கும்இந்தியநிறுமங்கள்சட்டம்நிறுமத்திற்கும்இந்திய கூட்டுறவுச்சட்டம்கூட்டுறவுசங்கங்களுக்கும்இருப்பதைப் போலதனியாள்வணிகத்திற்குதனிச்சட்டம்ஏதுவும்இல் லை.

7)**பதிவு**:- தனியாள்வணிகத்தை பதிவு செய்ய வேண்டியதில்லைசிலவகைத்தொழில்களைமேற்கொள்ள உள்ளாட்சிநகராட்சிமற்றும்மாநகராட்சியிடமிருந்து உரிமம்பெறவேண்டும்.

8)**வாழ்வு**: நிறுமம்போன்றுஇதற்குநீடித்தவாழ்வு கிடையாது. தனியாள்வணிகரின்வாழ்வைப்பாதிக்கும் எதுவும்அவருடையதொழிலையும்பாதிக்கும்.அவருடைய இறப்பு(அ)தொழில்திறமைஇழத்தல்(அ) அவருக்கு வாரிசுஇல்லாமை போன்றவை தொழிலை முடிவுக்குகொண்டுவரும்.

9)**எளிமை**இதைதொடங்குவதும்கலைத்தலும்மிகவும்

எளிது. இவ்வணிகத்தைகலைக்கசட்டவிதிகளைபினபற்ற தேவையில்லை.

10**உள்ளூர்வியாபாரம்**:இவ்வணிகம்ஒருகுறிப்பிட்டப்பகுதியில்மட்டுமேநடைபெறும். சிலவகைத் தனிவணிகங்கள் கிளைகளுடன்சிலஇடங்களில்நடைபெறும்.

**65.ஆ.பங்கு மாற்றகம் இலக்கணம்(ம) இயல்புகள் :**

வேரஸ்டின் கூற்றுப்படி பங்கு மாற்றகம் என்பது வாங்கியவர் மற்றும் விற்பவர் ஒரு இடத்தில் கூடி அனைத்து வகையான பத்திரங்கள் பங்குகளை கையாளும் ஓரிடமே ஆகும்.

இயல்புகள்: அது பத்திரங்களை வாங்குதல் விற்பனை செய்தல் போன்ற செயல்கள் நடைபெறும் இடமாகும். பங்கு மாற்றகங்கள் பதிவு பெற்ற அல்லது அவ்வாறில்லாத தன்னிச்சையான சங்கமாகும். பங்கு மாற்றகங்கள் தங்களுக்காக வியாபாரம் செய்வதில்லை. தங்கள் உறுப்பினர்களுக்கு நிறுமபத்திரங்களில் வாணிபம் செய்வதற்கான வசதிகளை செய்து வருகிறது. பங்கு மாற்றகங்களில் செய்யப்படும் வியாபாரம் கடுமையான சட்ட திட்டங்களுக்குட்பட்டது. ஓவ்வொரு நடவடிக்கைக்கும் சட்ட திட்டங்கள் வகுக்கப்படும். ஓவ்வொரு பங்கு மாற்றகமும் தனக்குறிய சட்ட திட்ங்களை உருவாக்கி கொள்கிறது. பங்கு மாற்றகங்களின் சட்டதிட்டங்களுக்கு உறுப்பினர்கள் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். பங்கு மாற்றகங்களின் அலுவல் பட்டியலில் சேர்க்கப்பட்ட பத்திரங்கள் மட்டுமே இங்கு கையாளப்படுகின்றன.நிறுமங்கள் அறக்கட்டளை அரசுகள் நகராண்மை கழகங்கள் போன்றவற்றினுடைய பத்திரங்களும் இங்கு கையாளப்படுகின்றன.

உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து ஒரு நிர்வாக அமைப்பை தேர்ந்தெடுக்கின்றனர். அவ்வமைப்பு தன் உறுப்பினர்களின் நடவடிக்கைகளைச் சரியான முறையிலும் நேரடியாகவும் தேவையான அளவிலும் கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்றதாக விளங்குகிறது. உறுப்பினர்கள் மட்டுமே பங்கு மாற்றகங்களின் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்.18 வயது நிரம்பிய எந்த ஒரு நபரும் பங்கு மாற்றகத்தில் உறுப்பினராக முடியும் உண்மையான முதலீட்டாளர்களும் ஊகவணிகர்களும் பங்கு மாற்றகத்தில் பங்குபளை வாங்கி விற்பனை செய்யலாம்.

**66)அ)கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகள் :**

**1.கூட்டாளிகளின் உடன்பாட்டால் (பிரிவு 40):** ஒரு கூட்டாண்மை நிறுவனம் உடன்பாட்டால் உருவாக்கபடுகிறது கலைக்கப்படுகிறது.அனைத்து கூட்டாளியின் சம்மதத்தின் பெயரில் அல்லது கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் உடன்பாட்டால் கூட்டாண்மை நிறுவனம்ட கலைக்கபடலாம்.

**2.கட்டாய கலைப்பு (பிரிவு 41)** அனைத்து கூட்டாளிகளின் நொடிப்பு நிலையோ அல்லது ஒருவர் தவிர மற்ற எல்லா கூட்டாளிகள் நொடிப்பு நிலையோ கூட்டாண்மை நிறுவனம் கட்டாயமாக கலைக்கபடும்.மேலும் செய்து வரும் தொழில் சட்டத்திற்கு புறம்பானதாக இருந்தால் நிறுவனம் கட்டாயமாக கலைக்கபடும்.

**3.சில நிகழ்சிகள் நிகழ்வுறும் போது கலைப்பு (பிரிவு 42):** கூட்டாளியின் இறப்பு கூட்டாளியின் நொடிப்பு குறைந்த காலத்திற்கான கூட்டாண்மை – அந்தக் காலம் முடிந்தவுடனும் குறிப்பிட்ட தொழில் - அந்த தொழில் முடிந்தவுடன்.

**4.அறிவிக்கையால் விருப்பமுறிக் கூட்டாண்மை பிரிவு – 43** :விருப்பமுறிக் கூட்டாண்மையில் ஒரு கூட்டாளி நிறுவனத்தை கலைக்கும் தனது விருப்பத்தை அறிவிக்கை மூலம் கொடுத்தால்' நிறுவனம் கலைவுறும்.

**5.நீதி மன்றத்தால் பிரிவு - 44:**கூட்டாளி எவரேனும் ஒருவர் கீழ்காணும் காரணங்களுக்காக வழக்கு தொடர்வதன் மூலம் நிறுவனத்தை கலைக்க நிதிமன்றம் ஆணையை பிறப்பிக்கலாம்.

**(1)கூட்டாளி ஒருவரின் பித்த நிலை** :கூட்டாளி ஒருவரின் பித்த நிலையை அடைந்தால் நீதி மன்றம் கலைப்பதற்கான ஆணையை பிறப்பிக்கலாம்.

**(2)நிலையான திறமை இன்மை** :கூட்டாளி ஒருவர் நிரந்தரமாக தொழில் செய்யும் திறமையை இழந்திருந்தால்

**(3)கூட்டாளியொருவரின் ஒழுக்ககேடு** :கூட்டாளி ஒருவர் ஒழுக்கக் கேடான குற்றத்தை செய்திருப்பின்

**(4)உரிமை மாற்றம்** :கூட்டாளி ஒருவர் தனது உரிமை முழுவதையும் பிறருக்கு மாற்றி கொடுத்தால்

**(5)தொடர்ந்து உடன்பாட்டை மீறுகை** :கூட்டாண்மை உடன்பாட்டை ஒரு கூட்டாளி தொடர்ந்து மீறிக்கொண்டிருந்தால்

**(6)நீதி நேர்மை அடிப்படையில்** :நிறுவனத்தை கலைத்திட போதிய அடிப்படை காரணமுள்ளது என்று நீதிமன்றம் கருதினால்

**66.ஆ)தனி வரையறு நிறுமம் பொது வரையறு நிறுமம் வேறுபாடு :**

| வ.எண் | அடிப்படை | தனி நிறுமம் | பொது நிறுமம் |
|---|---|---|---|
| 1 | உறுப்பினர் எண்ணிக்கை | குறைந்தது 2 அதிகபட்சம் 50 | குறைந்தது 7 உச்ச அளவிற்கு வரையறை இல்லை |
| 2. | பெயர் | இறுதியில் தனிவரையறுக்கப்பட்டது.என்று முடிவடைய வேண்டும். | வரையறுக்கப்பட்டது என்ற சொல்லுடன் முடிவடைய வேண்டும். |
| 3. | செயல்முறை விதிகள் | தான் சொந்தமாக தயாரித்த செயல் நடைமுறை விதிகளை | செயல் நடைமுறை விதிகளை தாயாரிக்காத நிறுமங்கள் நிறுமச்சட்டத் |

| | | | |
|---|---|---|---|
| | | நிறுமப்பதிவ ாளரிடம் சமர்பிக்க வேண்டும். | தில் உள்ள மாதிரி அட்டவணை –அ பின்பற்ற வேண்டும். |
| 4. | குறுமப்பங்கெ ாப்பம் | அவசியமில் லை | கட்டாயமாக் கப்பட்டுள்து |
| 5 | இயக்குநர்கள் | குறைந்தது 2 இயக்குநர்க ள் தேவை | குறைந்தது 3 இயக்குநர்க ள் தேவை |
| 6. | சட்ட முறை கூட்டம் | அவசியமில் லை | 6மாதத்திற்கு ள் கூட்ட வேண்டும். |
| 7. | தகுதிப்பங்குக ள் | இயக்குநர்க ள் தேர்ந்தெடுக் கப்பட தகுதிப்பங்கு கள் பெறவேண்டி ய அவசியமில் லை | இயக்குநர்க ள் தகுதிப்பங்கு களை பெற்றிட வேண்டும். |
| 8. | குறைவெண் | கூட்டம் செல்லத்தக் கதாக அமைய கூட்டத்திற்கு வருகை தர வேண்டி குறைந்தளவு உறுப்பினர்க ளின் எண்ணிக்கை 2 | குறைந்தளவு உறுப்பினர்க ளின் எண்ணிக்கை 5 |
| 9. | பங்கு விற்பனை | பொது மக்களுக்கு பங்கு விற்பனை தடை செய்யப்பட்டு ள்ளது | பங்கு விற்பனை செய்யலாம் |
| 10. | இயக்குநர்களி ன் ஓய்வு | 65 வயதுக்கு மேலும் இயக்குநராக பணியாற்றல ாம் | 65 வயதில் ஓய்வு பெற வேண்டும். |

**67)அ).கூட்டுறவு அமைப்பின் ஏதேனும் 10 சிறப்பியல்புகள் :**

**1.தன்னிச்சையாக சேரும் சங்கம்:** பலர் தன்னிச்சையாக சேர்ந்து உருவாக்கும் அமைப்பே கூட்டுறவுச் சங்கமாகும்.இவ்வமைப்பில் உறுப்பினராக சேருமாறு ஒருவரை கட்டாயபடுத்த முடியாது.ஒரு நபர் எப்போது வேண்டுமானாலும் இச் சங்கத்தில் சேரலாம் விலகலாம்.

**2.சமத்துவம் :** கூட்டுறவு சங்கத்தில் எல்லா உறுப்பினர்களும் சமம்.எல்லா உறுப்பினர்களுக்கம் சமஉரிமை உண்டு.அதிகமான முதலீடு ஒருவர் அளிக்கும் காரணத்தால் அதிக உரிமை அவருக்கு கிடையாது.

**3.வளங்களின் இணைப்பு:** இந்த அமைப்பில் எல்லா உறுப்பினர்களின் சொந்த வளங்களும் ஒருங்கிணைக்கப்படுகிறது.அவர்களட எல்லா உறுப்பிநர்களின் நரனுக்காக இதை பயன்னடுத்தகின்றனர்.

**4.ஒருமுனைபடுத்திய முயற்சி:** இந்த அமைப்பில் எல்லாத் தனிநபர்களும் இணைந்து பணியாற்றுகின்றனர்.கூட்டுறவு அமைப்பின் முக்கிய கோட்பாடு ஒவ்வொருவரும் அனைவருக்காக அனைவரும் ஒவ்வொருவருக்காக

**5.பன்மர் உறுப்பினராதல் :** பன்மர் இணைந்து உருவாக்கும் சங்கம் கூட்டுறவு அமைப்பு.ஒரு அமைப்பை உருவாக்க குறைந்தது 25 நபர்கள் தேவை.அதிக பட்சம் வரையறை இல்லை

**6.நிதி :** கூட்டுறவு சங்கத்தின் முதல் சம மதிப்புடைய பங்குகளாக பிரிக்கப்பட்டுள்ளது.இந்தச் சங்கமும் தனது பங்கு முதலை உறுப்பினர்களிடம் திரட்டுகிறது.பங்குகளின் முகமதிப்பு மிகக் குறைவானதாக இருக்கும்.ஒரு நபர் இச் சங்கத்தின் பங்குகளை வாங்குவதன் மூலம் உறுப்பினராகலாம்.

**7.அரசியல் செல்வாக்கு இல்லை:** கூட்டுறவு சங்கத்தில் அரசியல்வாதி உறுப்பினராகலாம்.ஆனால் அரசியல் அங்கு நுலைவதில்லை.அரசியல் சார்பற்ற அமைப்பாக இச்சங்கம் இயங்குகிறது.

**8.பரஸ்பர உதவி:** சங்கத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் பரஸ்பர உதவி செய்ய வேண்டும் என்பது கூட்டுறவு அமைப்பின் அடிப்படை தத்துவம் ஒவ்வொரு உறுப்பினரும் தனக்கும் உதவி செய்து கொண்டு பிறருக்கும் உதவ வேண்டும்.

**9.சட்டமுறை தணிக்கை:** கூட்டுறவு தணிக்கை துறையைச் சார்ந்த அலுவவலர்கள் ஒவ்வொரு ஆண்டும். கூட்டுறவு சங்கத்தை தணிக்கை செய்கின்றனர்.

**10.ஊக வணிகம் இல்லை:** கூட்டுறவு அமைப்பின் பங்குப் பட்டியல் பதிய உறுப்பினர்களுக்காக எப்போதும் திறந்தே இருக்கும்.ஊக வணிகம் என்பது இவ்வமைப்பில் இல்லை.

11.மக்களாட்சி முறையில் மேலாண்மை
12.சேவையின் தத்துவம்
13.சட்டத் தகைமை
14.உறுப்பினராவதற்க்கு தடையில்லா வாய்ப்பு
15.முதலுக்கு சொற்ப வருவாய்
16.உள்ளுர் உறுப்பினர்கள்
17.மாநிலஅரசு கட்டுப்பாடு
18.உபரிபகிர்வு
19.பதிவு
20.சட்ட உரு

21.பொறுப்பு
22.ரொக்க வியாபாரம்
23.பங்குகளை மாற்ற இயலாமை
24.சட்ட ஆளுமை
25.முறையான பயிர்சி

**67.ஆ)இயக்குநருக்குரிய அதிகாரங்கள் :**

1.பொது அதிகாரம் :

நிறுமம் எச் செயல்களில் ஈடுபட அதிகாரம் பெற்றுள்ளதோ அந்த அனைத்து செயல்பாடுகளிலும் ஈடுபடவும் அவற்றிக்குவேண்டிய அதிகாரங்களை பயன்படுத்தவும் ஒரு நிறுமத்தின் இயக்கநரவைக்கு உரிமை உண்டு.ஆயினும் நிறுமம் எச் செயலையாவது பொது கூட்டத்தில் நிறைவேற்றப்பட தீர்மானத்தின்படிதான் செய்ய வேண்டும்.என்றிருப்பின் அதனை இயக்குநர் தானே செய்யக் கூடாது.

2.சட்டமுறை அதிகாரங்கள்:

- அழைப்பு பணத்தை செலுத்துமாறு கோரிட
- கடனீட்டு பத்திரங்களை வெளியிட
- கடனீட்டுப் பத்திரம் வெளியிடாமல் வேறுவகையில் கடன் பெற
- நிறுமத்தின் நிதியினை முதலீடு செய்ய
- கடன் வழங்க

அதிகாரங்கள்:

- இயக்குநர் பதவியில் காலியிடம் இருப்பின் அதனை நிரப்ப
- செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கயிருப்பின் கூடுதல் இயக்குநர்களை நியமித்துக் கொள்ள
- செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கயிருப்பின் மாற்று இயக்குநரை நியமிக்க
- எந்த ஒரு இயக்குநரோ அவருடைய உறவினரோ தொடர்புற்றிருக்கும் ஒப்பந்தங்கட்கு அனுமதி வழங்க
- ஆண்டுபொதுகூட்டத்தில் விளம்புவதற்காக பங்காதாய சதவிகிதத்தை குறிப்பிட்டு பரிந்துரைக்க
- அதே மேலாண்மையின் கீழ் இயங்கும் நிறுமங்களில் முதலீடு செய்ய
- நிறுமத்தின் முதலாவது தணிக்கையினரை நியமிக்க
- தணிக்கையர் பதவியில் எழுந்துள்ள காலியிடத்தை நிரப்ப

கட்டுப்பாடு:

- தொழில் முழுவதையும் அல்லது மிகப் பெரும்பான்மையானதை விற்க குத்தைகைக்குவிட (அ)வேறு வகையில் பயன்படுத்த
- கடனுக்கு திருப்பி செலுத்தும் கால கெடுவை நீடிக்க
- முன்னரே வழங்கப்பட்ட கடன் தொகையுடன் தற்போது வாங்க உள்ள கடனையும் சேர்த்தால் நிறுமத்தில் செலுத்தப் பெற்ற முதல் தொகையையும் காப்பு தொகையையும் சோத்த தொகைக்கு அதிகமாகயிருப்பினும் தற்பொது திட்டமிட்டுள்ள கடன் பெற
- குறிப்பிட்ட வரம்பு கடந்த அறக்கொடை வழங்க

குறிப்பு: அரசு வழங்கும் விடைக்குறிப்பினை ஒப்பிட்டு பார்த்து மைய மதிப்பீட்டு பணியை மேற்கொள்ளுமாறு ஆசிரியப் பெருமக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்
www.maduraicommerce.com